**டிசம்பர் – 07**

# TNPSC துளிகள்

- 2024–25 ஆம் ஆண்டு விரிவாக்கத்திற்குப் பிறகு பதினொரு உறுப்பினர் நாடுகளைக் கொண்ட BRICS அமைப்பில் சேர தாய்லாந்து தனது விருப்பத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- செவ்ரான் நிறுவனத்திற்கு வழங்குவதற்காக ரிலையன்ஸ் நிறுவனத்தின் ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இந்தியா முதன்முறையாக அமெரிக்காவின் மேற்கு கடற்கரைக்கு ஜெட் விமான எரிபொருளை ஏற்றுமதி செய்துள்ளது.
- இந்தியா-இந்தோனேசியா இடையிலான கூட்டுச் சிறப்புப் படைப் பயிற்சியான 10வது கருட சக்திப் பயிற்சி இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் பக்லோவில் தொடங்கியது.
- பாகிஸ்தானின் பீல்ட் மார்ஷல் சையத் அசிம் முனீர் நாட்டின் முதல் பாதுகாப்புப் படைகளின் தலைவராக (CDF) ஐந்து ஆண்டுகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளார்.
- மூங்கில் இறால் (அட்டியோப்சிஸ் ஸ்பைனிப்ஸ்) ஆனது 72 ஆண்டுகளுக்குப் பிறகு கர்நாடகா மற்றும் ஒடிசாவில் மீண்டும் தென்பட்டுள்ளது.
  - லார்வாக்கள் உப்பு நீரில் வளரும் என்பதால், இந்த இனமானது ஓர் ஆம்பிட்ரோமஸ் (நன்னீர் மற்றும் உப்பு நீர் என இரண்டிலும் வாழும்) இனம் ஆகும்.
- இந்தியக் கடற்படை தினம் ஆனது, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 04 ஆம் தேதியன்று கடற்படையினரின் துணிச்சலைப் போற்றும் விதமாகவும், இந்திய எறிகணைகளைத் தாங்கிய கப்பல்கள் கராச்சி துறைமுகத்தை வெற்றிகரமாகத் தாக்கிய ட்ரைடென்ட் (1971) நடவடிக்கையை நினைவு கூரும் விதமாகவும் கொண்டாடப்படுகிறது.
  - 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Combat Ready, Cohesive, Self-Reliant" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## BNSS கீழான காப்பு

- தமிழ்நாடு அரசானது, BNSS (பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா) 2023 சட்டத்தின் 218(2) பிரிவினை இந்த மாநிலத்தின் அனைத்து காவல்துறையினருக்கும் நீட்டிக்கும் ஒரு அறிவிப்பை வெளியிட்டது.
- இந்தப் பிரிவானது, பணியில் இருக்கும்போது செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்களுக்காக எந்தவொரு காவல்துறை அதிகாரி மீதும் வழக்குத் தொடருவதற்கு முன்பு அரசாங்கத்தின் அனுமதியைக் கோருகிறது.
- இதே போன்ற காப்பு முன்னர் CrPC (குற்றவியல் நடைமுறைச் சட்டம்) சட்டத்தின் 197 ஆம் பிரிவின் கீழ் இருந்தது, ஆனால் பழைய நீட்டிப்பு உத்தரவுகள் குறித்து கண்டறிய முடியவில்லை.

- பொது ஒழுங்கைப் பேணுவதில் ஈடுபட்டுள்ள அனைத்து காவல்துறை அதிகாரிகளுக்கும் இந்தக் காப்பு விதியைப் பயன்படுத்த, BNSS 2023 சட்டத்தின் 218(3) பிரிவின் கீழ் உள்ள அதிகாரங்களை அரசு பயன்படுத்தியது.
- இந்தப் புதிய அறிவிப்பு ஆனது, 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழான தனியார் புகார்கள் அல்லது வழக்குகளுக்கான விதிகளை மாற்றவில்லை.




**Government sanction mandatory to prosecute cops as TN extends legal protection**

The protection requiring prior government sanction before a court could prosecute a public servant was narrowly applied in Tamil Nadu. Under the old CrPC 1973 and its re-enactment as Section 218 of the BNSS, this safeguard was automatically available only to public servants appointed by the state or central government. This left out the vast majority—estimated at **over 95%—of the state's police personnel.**

# தேசியச் செய்திகள்

## மத்திய கலால் மசோதா, 2025




- 1944 ஆம் ஆண்டு மத்திய கலால் சட்டத்தினை திருத்துவதற்காக, பாராளுமன்றம் 2025 ஆம் ஆண்டு மத்திய கலால் (திருத்த) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா சிகரெட், சுருட்டு, ஹூக்கா புகையிலை, மெல்லும் வகையிலான புகையிலை, சர்தா மற்றும் வாசனைப் புகையிலை ஆகியவற்றின் மீதான கலால் வரி மற்றும் வீத வரியை உயர்த்துகிறது.
- சிகரெட்டுகளுக்கு, 1,000 குச்சிகளுக்கு 200 முதல் 735 ரூபாய் வரை இருந்த கலால் வரி 2,700 முதல் 11,000 ரூபாய் வரையில் அதிகரிக்கிறது.
- மெல்லும் புகையிலைக்கான வரி 25 சதவீதத்திலிருந்து 100% ஆகவும், ஹூக்கா வரி 25 சதவீதத்திலிருந்து 40% ஆகவும் அதிகரிக்கிறது.

- புகைபிடித்தலுக்குப் பயன்படுத்தப்படும் குழாய்கள் மற்றும் சிகரெட்டுகளுக்கான புகையிலைக் கூறுகளின் கலவைகளுக்கான வரியானது 60 சதவீதத்திலிருந்து 325% ஆக அதிகரிக்கப் படுகிறது.
- மாநிலங்களவை இந்த மசோதாவை அங்கீகரித்து, இறுதி நிறைவேற்றத்திற்காக மக்களவைக்குத் திருப்பி அனுப்பியது.


## பாரத் டாக்ஸி சேவை





- டெல்லி மற்றும் குஜராத்தில் ஓட்டுநர்களுக்குச் சொந்தமான கூட்டுறவு மாதிரியின் கீழ் பாரத் டாக்ஸி சேவையின் செயல்பாட்டுச் சோதனைகளைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் தளமானது, தரகு இல்லாத கொள்கையைப் பின்பற்றுவதால் ஓட்டுநர்கள் 100% கட்டணத்தையும் தம்மிடமே வைத்திருக்க இயலும்.
- எந்த அதிக விலை நிர்ணயமும் இல்லாமல், கட்டணங்கள் அனைத்து பயணிகளுக்கும் நிலையானதாகவும் வெளிப்படையாகவும் இருக்கும்.
- இது கூட்டுறவு அமைச்சகம் மற்றும் தேசிய இணைய ஆளுகைப் பிரிவு (NeGD — தேசிய இணைய ஆளுகைப் பிரிவு) ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது.

## இந்தியாவில் குழந்தை ஊட்டச்சத்து குறைபாடு

- இந்தியாவில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 33.54% பேர் வளர்ச்சி குன்றியவர்கள் என்று அரசாங்கத் தரவு காட்டுகிறது.
- போஷன் டிராக்கரை (நிகழ்நேர ஊட்டச்சத்து கண்காணிப்பு அமைப்பு) பயன்படுத்தி 6.44 கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகளிடமிருந்து மதிப்பீடுகள் எடுக்கப்பட்டன.
- NFHS-5 (தேசியக் குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு-5, 2019–21) ஆனது முன்னதாக 35.5% பேர் வளர்ச்சி குறைபாடு உள்ளவர்களாகவும் மற்றும் 32.1% பேர் உயரத்திற்கு ஏற்ற எடை இல்லாமல் உள்ளவர்களாகவும் இருப்பதாக அறிவித்தது.
- போஷன் டிராக்கர் ஆனது, வளர்ச்சிக் குறைபாடு, உடல் மெலிதல் மற்றும் உயரத்திற்கு ஏற்ற எடை இல்லாமல் உள்ளவர்களைக் கண்காணிக்க 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- மிஷன் போஷன் 2.0 திட்டத்தில் அங்கன்வாடி சேவைகள் மற்றும் ஊட்டச்சத்து விநியோகத்தை மேம்படுத்துவதற்கான போஷன் அபியான் ஆகியவை அடங்கும்.




## OBC பட்டியலில் NCBC பரிந்துரை




- மேற்கு வங்காளத்தின் மத்திய இதரப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் (OBC) இருந்து 35 சமூகங்களை நீக்குமாறு தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் (NCBC) மத்திய அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.
- இந்த 35 சமூகங்களில் பெரும்பாலானவை முஸ்லிம்கள் என்ற நிலையில் மேலும் இந்தப் பரிந்துரையானது 2023 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட NCBC ஆய்வினைத் தொடர்ந்து முன் வைக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சமூகங்கள் 2014 ஆம் ஆண்டில் மத்திய OBC பட்டியலில் சேர்க்கப்பட்டன என்ற நிலையில் மேலும் NCBC அந்த ஆண்டிலிருந்து மொத்தம் 37 சமூகங்களை மதிப்பாய்வு செய்தது.
- மத்திய OBC பட்டியலில் ஏதேனும் மாற்றம் இருந்தால், குடியரசுத் தலைவர் புதுப்பிக்கப் பட்ட பட்டியலை அறிவிப்பதற்கு முன்னதாக அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட வேண்டும்.

## பிராந்திய AI தாக்க மாநாடு 2025


- பிராந்திய செயற்கை நுண்ணறிவு (AI) தாக்க மாநாடு 2025 ஆனது மேகாலயாவின்

ஷில்லாங்கில் நடைபெற்றது.

- இது 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் திட்டமிடப்பட்ட 2026 ஆம் ஆண்டு இந்திய AI தாக்க உச்சி மாநாட்டிற்கான ஆயத்த நிகழ்வாகும்.
- இந்த மாநாடு ஆனது இந்தியா முழுவதும் AI மேம்பாடு, தொழில்நுட்ப அணுகல், உற்பத்தித் திறன் மேம்பாடு மற்றும் திறன் பயிற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இந்திய அரசு ஆனது AI முன்னெடுப்புகளுக்காக 10,300 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.
- இது வரை மொத்தம் 570 தரவு மற்றும் AI ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.




## இந்தியாவின் உள்ளடக்கிய வகையிலான நிதி கட்டமைப்பு 2025–30




- 2025–30 ஆம் ஆண்டுகளுக்கான NSFI (நிதி உள்ளடக்கத்திற்கான தேசிய உத்திமுறை) ஆனது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- இது நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு சபையின் (FSDC-SC) துணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
- இந்த உத்தியானது, இந்தியா முழுவதும், குறிப்பாக வசதி சரியாக வழங்கப்படாத குடும்பங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நிதிச் சேவைகளின் அணுகல், பயன்பாடு மற்றும் பரவலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- NSFI 2025–30 ஆனது பஞ்ச்-ஜோதி எனும் 47 நடவடிக்கை அம்சங்களைக் கொண்ட ஐந்து-நோக்கக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துகிறது.
- நிதி சார் கல்வியறிவு, வாடிக்கையாளர் பாதுகாப்பு, பாலினங்களுக்கு ஏற்ற

வகையிலான உள்ளடக்கம், திறன் மேம்பாடு மற்றும் கடை நிலை அணுகல் ஆகியவை இதில் கவனம் செலுத்தப்படும் பகுதிகளில் அடங்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## RELOS ஒப்பந்தம்





- 2025 ஆம் ஆண்டில் இந்தியாவுடனான பரஸ்பரத் தளவாடப் பரிமாற்ற ஆதரவு (RELOS) ஒப்பந்தத்தை ரஷ்யா அங்கீகரித்தது.
- எரிபொருள் நிரப்புதல், பழுதுபார்ப்பு, விநியோகம் மற்றும் பராமரிப்புக்காக என இரு நாடுகளின் ஆயுதப் படைகளும் ஒன்றுக்கொன்று ராணுவத் தளங்கள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை அணுக RELOS அனுமதிக்கிறது.
- இந்த ஒப்பந்தம் ஆனது பாதுகாப்புத் துறை சார் ஒத்துழைப்பு, கூட்டுப் பயிற்சிகள் மற்றும் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் (HADR) ஆகிய சில நடவடிக்கைகளை மேம்படுத்துகிறது.
- ஆர்க்டிக் மற்றும் பசிபிக் தளங்கள் உட்பட 40க்கும் மேற்பட்ட ரஷ்யக் கடற்படை மற்றும் விமானத் தளங்களை இந்தியா அணுகுகிறது.
- Su-30MKI விமானங்கள், T-90 பீரங்கிகள், MiG மற்றும் சுகாய் படைகள் மற்றும் S-400 வான் வழிப் பாதுகாப்பு அமைப்புகள் போன்ற இராணுவ உபகரணங்களைப் பராமரிப்பதை RELOS ஆதரிக்கிறது.
- இந்த ஒப்பந்தம் அமெரிக்காவுடனான இந்தியாவின் பிற பாதுகாப்பு ஒப்பந்தங்களுக்கு நிறை நிரப்பாக உள்ளது:
    - LEMOA (தளவாடப் பரிமாற்றத்திற்கான உடன்படிக்கை குறிப்பு),
    - COMCASA (தொலைத் தொடர்பு இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம்), மற்றும்

- BECA (அடிப்படைப் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம்).

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பென்னு குறுங்கோளில் சர்க்கரை மூலக்கூறுகள்




❖ நாசாவின் OSIRIS-REx (Origins, Spectral Interpretation, Resource Identification, Security-Regolith Explorer) விண்கலம் ஆனது 2023 ஆம் ஆண்டில் பென்னு குறுங்கோளில் இருந்து சேகரித்த மாதிரிகளைப் புவிக்கு திருப்பி அனுப்பியது.

❖ அதில் ஆற்றலாகப் பயன்படுத்தப்படும் ஆறு கார்பன் மூலக்கூறு கொண்ட சர்க்கரையான குளுக்கோஸை அறிவியலாளர்கள் கண்டறிந்தனர்.

❖ ரைபோ நியூக்ளிக் அமிலத்திற்கு (ஆர்.என்.ஏ) அவசியமான ஐந்து கார்பன் மூலக்கூறு கொண்ட சர்க்கரையான ரைபோஸும் இதில் கண்டுபிடிக்கப்பட்டது.

❖ அடையாளம் காணப்பட்ட பிற கரிம சேர்மங்களில் அமினோ அமிலங்கள், நியூக்ளியோபேஸ்கள் மற்றும் கார்பாக்சிலிக் அமிலங்கள் அடங்கும்.

❖ டி.என்.ஏவில் உள்ள சர்க்கரையான டி ஆக்ஸிரைபோஸ் (டி ஆக்ஸிரைபோ நியூக்ளிக் அமிலம்) இதில் கண்டறியப்படவில்லை.

## அமெரிக்காவின் சந்திர அணுசக்தி திட்டம்

❖ 2030 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் சந்திரனில் ஒரு சிறிய அணு உலையை நிறுவ அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

❖ இந்த உலையானது அணுக்கருப் பிளவு மின் உற்பத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.


❖ நிலவின் இரவு நேரங்களிலும், குறைந்த சூரிய ஒளி உள்ள பகுதிகளிலும் அணுசக்தி தொடர்ச்சியான ஆற்றலை இது வழங்க முடியும்.

❖ சிறிய பிளவு உலைகள் ஆனது உயிர்கள் வாழ்வதற்கான ஆதரவு, ஆய்வகங்கள் மற்றும் தொழில்துறைச் செயல்பாடுகளுக்கு என்று பல்லாயிரக்கணக்கான கிலோவாட்களை உருவாக்க முடியும்.


❖ அணு உலைகள் நிலவில் வாழ்விடங்கள், பனிச் செயலாக்கம் மற்றும் போக்குவரத்து வாகனங்களுக்கான மின் கல மின்னேற்றம் ஆகியவற்றை நிறுவ உதவும்.

❖ அணு உலைகளில் கடைகோடி விண்வெளிப் பயணங்களுக்கான அணு சக்தி சார்

வெப்ப மற்றும் அணு மின்சார அமைப்புகள் அடங்கும்.




## இத்தாலியில் சிவப்பு நிற ELVE ஒளிவட்டம்




- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதியன்று வடக்கு இத்தாலியில் உள்ள போசாக்னோ மீது ஒரு சிவப்பு நிற ELVE ஒளி வட்டம் தோன்றியது.
- இந்த ஒளி வட்டம் என்பது தோராயமாக 200 கிலோமீட்டர் பரப்பளவில் பரவி சுமார் 100 கிலோமீட்டர் உயரத்தில் ஏற்பட்டது.
- ELVE என்பது மின்காந்த துடிப்பு காரணமாக ஏற்படும் ஒளி உமிழ்வுகள் மற்றும் மிகக் குறைந்த அதிர்வெண் இடையூறுகளைக் குறிக்கிறது.
- அவை கீழ் மட்ட அயனி மண்டலத்தில் மின்னல் மூலம் உருவாகும் மின்காந்தத் துடிப்புகளால் ஏற்படுகின்றன.
- ELVE ஆனது நாசாவால் நிலையற்ற ஒளிரும் நிகழ்வுகள் (TLE) என வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- பூமியில் ஏற்படும் ELVE நிகழ்வுகளின் சிவப்பு நிறம் ஆனது, வளிமண்டலத்தில் உள்ள நைட்ரஜன் மூலக்கூறுகளுடன் உமிழப்படும் ஆற்றல் தொடர்பு கொள்வதன் காரணமாக ஏற்படுகிறது.

- வடக்கு இத்தாலியின் போசாக்னோவுக்கு மேலே மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டு ELVE ஒளிவட்டங்கள் காணப்பட்டன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீடு 2025/26

**WOMEN, PEACE & SECURITY INDEX 2025/26: TOP 10 COUNTRIES**

| RANK | COUNTRY | SCORE (0.000-1.000) |
|---|---|---|
| 1 | Denmark | 0.939 |
| 2 | Iceland | 0.932 |
| Tied | Norway | 0.924 |
| Tied | Sweden | 0.924 |
| 5 | Finland | 0.921 |
| 6 | Luxembourg | 0.918 |
| 7 | Belgium | 0.912 |
| 8 | Netherlands | 0.905 |
| Tied | Austria | 0.898 |
| Tied | New Zealand | 0.898 |

Note: Ranks 3 and 9 are ties. Australia ranks 11th with a score of 0.896. Source: Georgetown Institute for Women, Peace and Security (GIWPS) and Peace Research Institute Oslo (PRIO).

- இந்தக் குறியீட்டை ஜார்ஜ்டவுன் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு நிறுவனம் (GIWPS) மற்றும் அமைதி ஆராய்ச்சி நிறுவனம் ஒஸ்லோ (PRIO) ஆகியவை வெளியிட்டு உள்ளன.
- WPS குறியீடு ஆனது உள்ளடக்கம், நீதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில், 181 நாடுகளில் பெண்களின் நிலையை அளவிடுகிறது.
- டென்மார்க் 0.939 மதிப்பெண்களுடன் முதலிடத்தில் உள்ளது என்ற நிலையில் இதில் ஆப்கானிஸ்தான் 0.279 மதிப்பெண்களுடன் 181வது இடத்தில் உள்ளது.
- இந்தியா 0.607 மதிப்பெண்களுடன் இதில் 131வது இடத்தில் உள்ளது.
- கடந்த ஆண்டில் மொத்தம் 676 மில்லியன் பெண்கள் மோதல்களுக்கு உள்ளாகும் நிலையை எதிர்கொண்டனர்.
- இந்தத் தரவரிசையில் மிகவும் கடைசி இடங்களில் உள்ள பத்து நாடுகளில் ஒன்பது நாடுகள் மோதல்களால் பாதிக்கப்பட்ட அல்லது பலவீனமான நாடுகள் ஆகும்.
- பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் குறைந்து வருவதால், முன்னேற்ற நடவடிக்கைகளுக்குப் பிறகு அமெரிக்கா 31வது இடத்தில் உள்ளது.


# மாநிலச் செய்திகள்

## முக்கிய மந்திரி பாரத் தர்ஷன் யோஜனா

- பீகார் மாநில அரசானது அரசு மேல்நிலைப் பள்ளிகளின் மாணாக்கர்களுக்காக இந்தத் திட்டத்தை தொடங்கியது.
- இந்தத் திட்டமானது, கலாச்சார விழிப்புணர்வு, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும்

அனுபவக் கற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இதன் கீழ், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணாக்கர்கள் இந்தியா முழுவதும் உள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள், கலாச்சார மையங்கள் மற்றும் முக்கிய தளங்களைப் பார்வையிடுவர்.
- இந்தத் திட்டம் ஆனது ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கான பீகாருக்குள்ளேயான சுற்றுப் பயணங்களை உள்ளடக்கிய, முந்தைய முக்கிய மந்திரி பீகார் தரிசன யோஜனாவை விரிவுபடுத்துகிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ரமோஜி சிறப்பு விருதுகள் 2025




- ஐதராபாத்தில் நடைபெற்ற முதலாவது ரமோஜி சிறப்பு விருதுகள் 2025 விழாவில் கிராமப்புற மேம்பாட்டிற்காக அம்லா அசோக் ருயாவுக்கு உயர் நிலை விருது வழங்கப் பட்டது.

- அவர் "தண்ணீரின் தாய்" என்று அழைக்கப்படுகிறார்.
- ஆகார் அறக்கட்டளை மூலம் ருயா ஆற்றியப் பணி, வறட்சியால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் நீர்ச் சேமிப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- ருயாவின் முன்னெடுப்புகளில் பல வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் தடுப்பணைகள் கட்டுவது மற்றும் விவசாய மீள்தன்மையை ஆதரிப்பது ஆகியவை அடங்கும்.
- ஜெய்தீப் ஹர்திகர் (பத்திரிகை), ஸ்ரீகாந்த் பொல்லா (இளையோர்களின் வழிகாட்டி/யூத் ஐகான்), பல்லபி கோஷ் (பெண்களின் சாதனைகள்) மற்றும் பேராசிரியர் மாதவி லதா கலி (அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்) ஆகியோரும் விருது பெற்றனர்.
- சேவை, ஒழுக்கம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஆற்றப்படும் பெரும் பங்களிப்புகளைக் கௌரவிப்பதற்காக ரமோஜி சிறப்பு விருதுகள் 2025 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டன.

## உலக தடகள விருதுகள் 2025




- சுவீடனின் அர்மண்ட் டுப்லாண்டிஸ் மற்றும் அமெரிக்காவின் சிட்னி மெக்லாஃப்லின்-லெவ்ரோன் ஆகியோர் 2025 ஆம் ஆண்டின் சிறந்த உலக தடகள வீரர்களாக அறிவிக்கப் பட்டுள்ளனர்.
- ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் முன்னிலை வகித்ததற்காக உலகத் தடகள அமைப்பினால் இந்த விருதுகள் வழங்கப் பட்டன.
- தடியூண்றித் தாண்டுதல் வீரரான டுப்லாண்டிஸ், 6.30 மீட்டர் தூரம் தாண்டி, 2025 ஆம் ஆண்டில், நான்கு முறை படைக்கப்பட்ட தனது சொந்த உலகச் சாதனையை தாமே முறியடித்தார்.
- அவர் பங்கேற்ற 16 போட்டிகளிலும் தோற்காமல், அவரது ஐந்தாவது தொடர் டைமண்ட் லீக் பட்டத்தை வென்றார்.
- உலகச் சாம்பியன்ஷிப்பில் மெக்லாஃப்லின்-லெவ்ரோன் 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தை 47.78 வினாடிகளில் நிறைவு செய்தார்.
- விருது பெற்ற மற்ற வீரர்களில் நிக்கோலா ஒலிஸ்லேகர்ஸ் (உயரம் தாண்டுதல்), இம்மானுவேல் வான்யோனி (800 மீ), மரியா பெரெஸ் (20 கிமீ & 35 கிமீ பந்தய நடை),

மற்றும் செபாஸ்டியன் சாவ் (மராத்தான்) ஆகியோர் அடங்குவர்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச ஒருதலைபட்ச அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிரான தினம் 2025 - டிசம்பர் 04




- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளை 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அறிவித்தது.
- ஐ.நா. சபையின் ஒப்புதல் இல்லாமல் விதிக்கப்படும் தடைகளின் எதிர்மறை விளைவுகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- ஒருதலைபட்ச அடக்குமுறை நடவடிக்கைகளில் வர்த்தகத் தடைகள், சொத்து முடக்கம், முதலீட்டுக் கட்டுப்பாடுகள், பயணத் தடைகள் மற்றும் தடுக்கப்பட்ட நிதிப் பரிவர்த்தனைகள் ஆகியவை அடங்கும்.

## சர்வதேச வங்கிகள் தினம் 2025 - டிசம்பர் 04




- நிலையான மேம்பாடு மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஆதரிப்பதில் வங்கிகளின்

பங்கை எடுத்துக்காட்டுவதே இந்த நாளின் நோக்கமாகும்.

- உள்கட்டமைப்பு, தூய்மையான எரிசக்தி மற்றும் சமூகத் திட்டங்களுக்கு நிதி அளிப்பதன் மூலம் ஐ.நா. சபையின் 2030 ஆம் ஆண்டு நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைய வங்கிகள் உதவுகின்றன.
- வசதி முறையாக வழங்கப்படாதச் சமூகங்களுக்கு கடன் மற்றும் டிஜிட்டல் வங்கி சேவைகளை வழங்குவதன் மூலம் நிதி உள்ளடக்கத்தையும் அவை ஊக்குவிக்கின்றன.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் பாரம்பரியத் தளங்களின் வருகையாளர் எண்ணிக்கையின் தர வரிசை 2024–25




- இந்தத் தரவரிசைகளை கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) வெளியிட்டது.
- உத்தரப் பிரதேசத்தின் ஆக்ராவில் உள்ள தாஜ்மஹால், இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் வருகை தந்த நினைவுச் சின்னமாகும்.
- 2024–25 ஆம் ஆண்டில், இது 6.26 மில்லியன் உள்நாட்டு மற்றும் 0.65 மில்லியன் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைப் பெற்றது.
- சூரியக் கோயில் (கோனார்க், ஒடிசா), குதுப் மினார் (டெல்லி), செங்கோட்டை (டெல்லி) மற்றும் பீபி கா மக்பரா (ஔரங்காபாத், மகாராஷ்டிரா) ஆகியவை பிற முன்னணி உள் நாட்டு நினைவுச் சின்னங்கள் ஆகும்.
- ஆக்ரா கோட்டை, ஹுமாயூனின் கல்லறை, ஃபதேபூர் சிக்ரி மற்றும் இதிமத்-உத்-தௌலா உள்ளிட்ட முன்னணி வெளிநாட்டினர் சுற்றுலாத் தலங்கள் ஆக்ரா-டெல்லி சுற்றுப் பகுதியில் குவிந்துள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★